eISSN: 3049-0723 pISSN: 3107-7781
Vol. 4 Issue: 03 December 2025
DOI: https://doi.org/10.63300/tm040312

# Innovations in Scientific Discoveries in the Short Stories of Antanoor Suran

**K. Sengodi*, Dr. N. Krishnaveni****

*Full-time PhD Scholar, Department of Tamil, Government Arts College (Autonomous), Kumbakonam – 612 002 Tamil Nadu, India Email: dr.k.sengodi@gmail.com, Phone: +91 9047527669

**Research Guide, Associate Professor, Department of Tamil, Government Arts College (Autonomous), (Affiliated with Bharathidasan University), Kumbakonam – 612 002 Tamil Nadu, India. Email: dr.n.krishnaveni@gmail.com, Phone: +91 9443070483

**Abstract:**

This research paper primarily aims to analyze the contribution of Andanoor Sura to the contemporary world of the Tamil short story and the novelty of the scientific discoveries embedded within his works. Specifically, it examines the short stories 'Sivvaga Panthu' (The Rectangular Ball), 'Thodarbhu Ellaikku Ullae' (Within Communication Range), 'Poongothaikku Karpu Undu' (Poongothai Has Chastity), and 'Sivappu Maathirai' (The Red Tablet), which are found in his collections 'Thadukkai' (Obstruction/Barrier) and 'Thira' (Open/Door). Through these short stories, the author has presciently depicted—as both scientific discoveries and social innovations—the concepts of the mobile phone, high-functioning robots, the intricate operations of the internet, the human tendency to consume pills even for common contemporary health issues (such as digestive disorders and flatulence), and special tablets designed to control women's hormonal balance. The research abstract of this paper is that these fictional elements serve as a continuation of scientific thought found in ancient Tamil literature, raising awareness about the changes occurring in modern society and the future impact science is poised to create.

**Keywords:** Cure - College - Customer Care - Torch Light - Police - Doctor - Business - Septic Tank - Central Minister - Discount - Mobile Net – Allopathy

**References:**

1. Sura, Andanur. *An Investigation of a Wandering Artist*. Iruvaatchi (Literary Port), 2016.
2. ---. *Tadukki*. Vetri Mozhi Publications, 2021.
3. ---. *Thira*. Vetri Mozhi Publications, 2021.
4. Ramasundaram. *Science that Nurtures Tamil*. New Century Book House (P) Ltd., 2017.
5. Manickam, A. Pulavar. *Compilation of Sangam Literature: Agananooru*. Vol. 2, Varthamana Pathippagam.
6. ---. *Compilation of Sangam Literature: Purananooru*. Vol. 5, Varthamana Pathippagam.
7. Neelakandan, Aravindhan. "Science Fiction - A Simple Historical Introduction." *Thinnai Online Weekly Magazine*. old.thinnai.com.
8. U. Vē. Cā. *Purananooru: Original and Commentary*. Dr. U. Vē. Cā. Nool Nilayam, 2014.
9. "Tamil Grammar." *Wikipedia*. ta.m.wikipedia.org.

**Author Contribution Statement**: NIL.
**Author Acknowledgement**: NIL.
**Author Declaration**: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

**License**

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

# அண்டனூர் சுராவின் சிறுகதைகளில் காணப்படும் கண்டுபிடிப்புகளில் புதுமைகள்

**க. செங்கொடி,** முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, அரசினர் கலைக்கல்லூரி (தன்னாட்சி), கும்பகோணம் – 612 002 தமிழ்நாடு, இந்தியா

**முனைவர் ந. கிருஷ்ணவேணி,** நெறியாளர், இணைப்பேராசிரியர் தமிழ்த்துறை, அரசினர் கலைக்கல்லூரி (தன்னாட்சி), (பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது), கும்பகோணம் – 612 002 தமிழ்நாடு, இந்தியா.

**ஆய்வுச் சுருக்கம் (Abstract)**

இந்த ஆய்வுக் கட்டுரை, சமகாலத் தமிழ்ச் சிறுகதை உலகில் அண்டனூர் சுரா ஆற்றியுள்ள பங்களிப்பு மற்றும் அவரது படைப்புகளில் பொதிந்துள்ள அறிவியல் கண்டுபிடிப்புகளின் புதுமைகளைப் பகுப்பாய்வு செய்வதை முதன்மை நோக்கமாகக் கொண்டுள்ளது. குறிப்பாக, அவரது தொகுப்புகளான 'தடுக்கை' மற்றும் 'திற' ஆகியவற்றில் உள்ள 'செவ்வகப் பந்து', 'தொடர்பு எல்லைக்கு உள்ளே', 'பூங்கோதைக்கு கற்பு உண்டு', மற்றும் 'சிவப்பு மாத்திரை' என்னும் சிறுகதைகள் ஆராயப்படுகின்றன. இச்சிறுகதைகளின் வாயிலாக, அலைபேசி, செயல்திறன் மிக்க இயந்திர மனிதன் (ரோபோ), இணையத்தின் நுட்பமான செயல்பாடுகள், மற்றும் தற்காலத்தில் சாதாரணமாகக் காணப்படும் உடல்நலக் குறைபாடுகளுக்கு (ஜீரணக் கோளாறு, வாயுப் பிரித்தல்) கூட மனிதர்கள் மாத்திரை உட்கொள்வதையும், பெண்களின் ஹார்மோன் சமநிலையைக் கட்டுப்படுத்தும் சிறப்பு மாத்திரைகள் பற்றியும், ஆசிரியர் தொலைநோக்குடன் அறிவியல் கண்டுபிடிப்புகளாகவும், சமூகப் புதுமைகளாகவும் சித்தரித்துள்ளார். இந்தப் புனைவுக்கூறுகள், பண்டைய தமிழ் இலக்கியங்களில் காணப்படும் அறிவியல் சிந்தனைகளின் தொடர்ச்சியாக, நவீனச் சமூகத்தில் ஏற்படும் மாற்றங்களையும், அறிவியல் ஏற்படுத்தவிருக்கும் எதிர்காலத் தாக்கங்களையும் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இக்கட்டுரையின் ஆய்வுச் சுருக்கமாகும்.

**கலைச்சொற்கள் (Keywords)**

*கியூர் –காலேஜ் – கஷ்டமர் கேர் – டார்ச் லைட் – போலிஸ் – டாக்டர் – பிசினஸ் – செஃப்டிக் டேங்க் – சென்ரல் மினிஸ்டர் – டிஸ்கவுண்ட்– மொபைல் நெட் – அலொப்பதி – சிறுகதை – அறிபுனைவு – இயந்திர மனிதன்.*

## 1. முன்னுரை (Introduction)

அறிவியலும் தொழில்நுட்பமும் மனித சமூக வளர்ச்சியின் முக்கியமான மைல்கற்களாகும். உலகின் ஒவ்வொரு தேசிய இனமும் தனக்கான சொந்த அறிவியல் தொழில்நுட்ப அறிவினைப் பெற்றே வளர்ந்து வந்துள்ளது. பழந்தமிழ்ச் சமுதாயம் பெற்றிருந்த அறிவியல் தொழில்நுட்ப அறிவும் நுண்மாண்

நுழைபுலனும் தமிழகத்தின் இலக்கண ஆதாரங்கள் மட்டுமின்றிப் புதைபொருட் சுவடுகளிலும், இன்று நின்று நிலைத்திருக்கும் இலக்கியங்களிலும் காணப்படுகின்றன. பழந்தமிழ் இலக்கியங்கள் முதற் கொண்டே படைப்பாளர்கள் அந்தந்த காலக்கட்டத்தின் கண்டுபிடிப்புகளில் காணப்படும் புதுமைகளையும் தங்களது படைப்புகளான சிறுகதை, நாவல்கள், கவிதை, கட்டுரைகளில் வெளிப்படுத்துகின்றனர். அந்த வகையில் அண்டனூர் சுராவும் தன் படைப்புகளில் அறிவியல் கண்டுபிடிப்புகளில் காணப்படும் புதுமைகளையும் கூறியுள்ளார் என்பதை இக்கட்டுரை வெளிப்படுத்துகின்றது.

## 2. பழந்தமிழ் இலக்கியங்களில் கண்டுபிடிப்புகளும் புதுமைகளும்

தொல்காப்பியமும், சங்க இலக்கியமும் பண்டைத் தமிழரின் அறிவியல் தொழில்நுட்பச் சிந்தனைகள், செயல்பாடுகள் குறித்த பல குறிப்புகளை பதிவு செய்துள்ளன. சிந்துவெளியில் சிறப்பாக தொழில்நுட்பம் செயல்பட்டதற்குப் பல சான்றுகள் அகழாய்வில் கிடைத்துள்ளன. சிந்துவெளி நாகரிகம், திராவிட நாகரிகம் என்பது வலியுறுத்தப்பட்டு வரும் நிலையில், அதன் கூறான தமிழர் நாகரிகமும் தொன்று தொட்டு வளர்ந்து வருவதைக் காணலாம். அகநானூற்றில் பலியிடம் ஒன்று இட்டிகை கொண்டு கட்டப்பட்டதை, **“இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம் வீழ்ந்தன”** என்னும் பாடல் வழியாக, பண்டைய காலத்தில் அறிவியல் தொழில்நுட்பத்தைக் காணலாம் (மாணிக்கம் 174-175). மேலும், **“கொடுமணம் பட்ட வினை மான் அருங்கலம் பந்தர் பயந்த பலர் புகழ் முத்தம்”** என்ற பாடலின் வாயிலாக தமிழரின் அணிகலன்களும், தொழில்நுட்பத்தையும் பதிற்றுப்பத்தின் வாயிலாக அறிய முடிகின்றது (மாணிக்கம் 510).

பண்டைய காலத்தில் வானின்கண் செலுத்துபவன் இல்லாது தானே இயங்கும் வானூர்தியில் அன்று சென்றார் என்று உறையூர் முதுகண்ணன் சாத்தனார் என்ற புலவர் பாடல் இயற்றியுள்ளார்.

“ ___ விசும்பின்

வலவன் ஏவா வான ஊர்தி

எயதுப ,என்ப_____’’ (புறம் 27 7-9)

என்னும் புறநானூற்றுப் பாடல் வாயிலாகப் பழந்தமிழ் இலக்கியங்களிலும் புதுமைகளும் அறிவியல், தொழில்நுட்பம் சார்ந்த கண்டுப்பிடிப்புகளும் இருந்துள்ளன என்பதை அறிய முடிகின்றது (உ.வே.சா. 56). இதனைத் தொடர்ந்து, தற்கால இலக்கியங்களான சிறுகதை, நாவல், கவிதை போன்ற நவீன இலக்கியங்களிலும் அறிவியல் சார்ந்த கண்டுப்பிடிப்புகளும் புதுமைகளும் பற்றிச் சிறுகதை ஆசிரியர்கள் படைக்கின்றனர் என்பதை அறியமுடிகின்றது.

## 3. சிறுகதைகளில் அறிவியல் புனைவின் பரிமாணங்கள்

சிறுகதைகளில் அறிவியல் கூறுகளைச் சேர்த்து எழுதுவது என்பது ஒரு கதையில் அறிவியல் தொழில்நுட்பம் சார்ந்த நிகழ்வுகளைச் சேர்த்து ஒரு புனைகதையாக மாற்றுவதாகும். அறிவியல் அம்சங்களைச் சாரமாகக் கொண்டுக் கற்பனையுடன் கலந்து ஆக்கப்படும் படைப்புகளை அறிவியல் புனைவு அல்லது அறிபுனை என்பர். அமெரிக்கன் ஹெரிடேஜ் ஆங்கில மொழி அகராதியில் அறிவியல் புனைவுகளை, "அறிவியல் முன்னேற்றம் மற்றும் அறிவியல் சித்தாந்தங்களைத் தன் கருவில் ஒரு பாகமாகவோ, கதை கருவில் பின்புலமாகவோ கொண்ட புனைவு வருங்கால அறிவியல் சாத்தியக் கூறுகளை உள்ளடக்கியது" என்று வரையறுக்கிறது (நீலகண்டன்). ஆகவே அறிவியல் கண்டுப்பிடிப்புகளும் புதுமைகளும் மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தவும், கற்பனைத் திறனை வளர்க்கவும் உதவுகிறது.

"அறிவியல் ஆக்கங்கள் கற்பனையான கதை களத்தில் நடக்கக் கூடியதாக இயற்கைக்கு மீறியதாக அல்லாமல் இருக்கும். எதிர்காலத்தை பின்புலமாகக் கொண்டதாக அதிக முன்னேற்றம் அடைந்த அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதாக விண்வெளிப் பயணம், வேற்றுகிரகவாசிகள், மனித ரோபோக்கள் வேலை செய்தல் போன்ற இயல்பு கடந்த நிகழ்வுகள் நடைபெறுவதாக அறிவியல் சிறுகதைகள் அமையும்" (நீலகண்டன்). அறிவியல் கண்டுபிடிப்புகளில் புதுமைகளையும் அவற்றின் செயல்பாடுகளையும் ஆராய்வது அறிவியல் புனவுகளின் முக்கியமான மையக் கருத்தாக உள்ளது. இதன் மூலம் அறிவியல் புனைவானது சிந்தனைகளின் இலக்கியம் என்றும் கூறப்படுகின்றது.

### 4. அண்டனூர் சுராவின் சிறுகதைகளில் காணப்படும் புதுமைகள்

இன்றைய அறிவியல் உலகில் நம்மைச் சுற்றிப் பல்வேறு கண்டுப்பிடிப்புகளும் புதுமைகளும் நாள்தோறும் நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றன. அண்டனூர் சுராவின் சிறுகதைகளில் ரோபோ என்னும் பெண் மனித இயந்திரத்தின் செயல்கள், அலைபேசியின் நன்மைகள், இணையத்தின் பயன்பாடுகள், பெண்களின் ஹார்மோனைச் செயல்பட வைக்கும் மாத்திரைகள் ஆகியவற்றை இக்கட்டுரை விவரிக்கிறது.

### 4.1. இயந்திர மனிதன் கண்டுபிடிப்புகளில் காணப்படும் புதுமைகள் (ரோபோ தொழில்நுட்பம்)

இன்றைய சூழலில் அறிவியல் வளர்ச்சி வெகுவாக வளர்ச்சி அடைந்துள்ளது. தொலைபேசி, இணையம், மின்னஞ்சல் போன்றவற்றால் உலகை கைக்குள் அடக்கி விடலாம், என்பது தெளிவாகிறது. அண்டனூர் சுரா, 'பூங்கோதைக்கும் கற்பு' உண்டு என்ற சிறுகதையில், எதிர்காலத்தில் இயந்திர மனிதனை வீட்டின் அன்றாடப் பணிகளை செய்வதற்கு மக்கள் பயன்படுத்துவர் என்பதைப் புனைவு இலக்கியமாக கூறியுள்ளார்.

**“நான் ஆப்பிள் 2+ நிறுவனர் நீண்ட கால வாழ்க்கையாளர் இரண்டு மாதங்களுக்கு முன்பு ஒரு வருட கால ஒப்பந்தத்தின் கீழ் பூங்கோதை என்கிற செவிலியை 10லட்சம் ரூபாய் முன்பணம் செலுத்தி பணி பெண்ணாக வீட்டில் அமர்த்திக் கொண்டேன்”** (சுரா 120).

இயந்திர மனிதர்கள் அனைவருக்கும் அவர்களுடைய எஜமானர்கள் இடும் கட்டளைகளை நிறைவேற்றும் விதமாக அனைத்துச் செயல்களையும் உள்ளீடு செய்து பொருத்தி இருப்பர்.

**“பூங்கோதை உலக தரச்சான்று பெற்ற பெண் ரோபோ. தமிழ் கலாச்சார பண்பாட்டுக் கூறுகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட இயந்திரம்”** (சுரா 126).

**“வீடு வாசலை அத்தனை சுத்தமாக வைத்திருந்தாள். வீட்டிற்குள் ஒரு கரப்பான் பூச்சி, எறும்பு, எலி, கரையான் எதையும் அவள் அனுமதித்தது இல்லை. கையுறை அணிந்து கொண்டே சமைத்தாள்’’** (சுரா 123).

‘பூங்கோதைக்கும் கற்புண்டு’ என்னும் சிறுகதையில் இயந்திர மனிதராக இருந்தாலும் அது பெண் ரோபோ ஆகும். அதனை வீட்டின் வேலைக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்ற மென்பொருளைப் பொருத்தியுள்ளனர். இயந்திர மனிதரை தவறாகப் பார்ப்பதோ அல்லது தொடுவதையோ செய்தால் அது தனது செயல்பாட்டை நிறுத்திக் கொள்ளும் என்பதை 2+ நிறுவனம் ஒப்பந்தத்தில் தெரிவித்துள்ளது. ஆகையால், வாடிக்கையாளர் சர்வதேச நீதிமன்றத்தில் அவர் சார்பாக வழக்கு போட்டால், இயந்திர மனிதருக்கும் வழக்கு போடும் உரிமை உள்ளது என்பதை இச்சிறுகதை உணர்த்துகின்றது.

**‘’பூங்கோதை தன் அன்றாட பணியை சட்டென நிறுத்திக் கொள்ள இரண்டு வாய்ப்புகள் உண்டு அந்த இரண்டு வாய்ப்புகளையும் நான் உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன் தூங்குவதையின் அந்தரங்க உறுப்புகளை உங்களது கண் கூர்ந்து கவனிக்கும் வேலையை செய்திருந்தாலும், அவரது ஆடையை கலைக்கும் முயற்சியில் இறங்கி இருந்தாலோ பூங்கோதை மெல்ல தன் இயக்கத்தை நிறுத்திக் கொண்டிருப்பாள். அப்படியாக நிறுத்துகையில் ஆப்பிள் 2+ நிறுவனத்திற்கு தகவல் கொடுத்த பிறகு இயக்கத்தை நிறுத்தி இருப்பாள்’’** (சுரா 127).

**4.2. இணைய வழி வாடிக்கையாளர் சேவை கண்டுபிடிப்புகளில் காணப்படும் புதுமைகள்**

இணைய வழி வாடிக்கையாளர் சேவையின் வாயிலாக அலைபேசியில் ஏதேனும் பிரச்சனை என்றால் அலைபேசியின் வாயிலாக வாடிக்கையாளரின் சேவை மையத்தைத் தொடர்புக் கொண்டு சரிசெய்திட முடியும். அதுமட்டுமின்றி, அலைபேசி வாயிலாகத் தொடர்புக் கொள்ளும் அனைவரும் கேட்டு மகிழும் அளவிற்குப் பாடல்களையும் வாடிக்கையாளர் சேவை மையத்திடம் கேட்டுப் பெறலாம். அதற்கு பயனாளரிடம் பணம் பிடித்தம் செய்வர் என்பதை 'தொடர்பு எல்லைக்கு உள்ளே' என்னும் சிறுகதை வாயிலாக அறியலாம்.

**“ஹலோ…! வணக்கம். எங்கள் கஸ்டமர் கேர் அதிகாரி இன்னும் சற்று நேரத்தில் உங்களிடம் தொடர்புகொள்வார். தொடர்பில் காத்திருக்கவும். உங்கள் மொபைலில் நீங்கள் விரும்பிய பாடலைக்**

**காலர் டோனாக தேர்வு செய்யுங்கள். மாத வாடகை முப்பது ரூபாய். சேவைக்கட்டணம் இருபது ரூபாய் மட்டுமே''** (சுரா 41).

**4.3. உள்ளங்கையில் உலகம் (இணையப் பயன்பாடு)**

இணையப் பயன்பாட்டின் வாயிலாக மக்கள் எங்கிருந்தாலும் அங்கிருந்துக் கொண்டே தங்களுடைய செயல்களைச் செய்து முடிக்கின்றனர். இணையம் வாயிலாக மின்சாரக் கட்டணம் செலுத்துதல், வங்கியில் பணப் பரிமாற்றம், பொருட்கள் வாங்குதல் போன்றவற்றை மேற்கொள்கின்றனர்.

**“நண்பரே… இன்னும் கரண்ட் பில் கட்டாம இருக்கீங்க…? இன்னைக்கு லாஸ்ட் டேட்னு வேற சொல்லுது என அலைபேசியில் மூழ்கிக் கொண்டிருந்த நண்பர் கேட்டார்”** (சுரா 43).

இதற்குப் பதிலளிக்கும் நண்பர், தான் இணையத்தின் வாயிலாகக் கட்டண நிலையை அறிந்ததாகக் கூறுகிறார்:

**“உங்க மொபைல் நெட்ல தான் பார்த்தேன்”** (சுரா 43).

**4.4. பெண்களின் ஹார்மோன் பிரச்சனைக்கு மாத்திரை கண்டுபிடிப்புகளில் காணப்படும் புதுமைகள்**

அறிவியல் வளர்ச்சியினால் ஆய்வகங்களில் நாள்தோறும் புதுப்புது கண்டுபிடிப்புகள் உருவாகின்றன. அவற்றில் ஒன்று பெண்களின் மாதவிடாய் சுழற்சிக்கு மாத்திரை கண்டறிந்துள்ளனர். அதனை வைத்துப் பருவம் எய்தும் வயது வந்த பெண் பிள்ளைகள் மாதவிடாய் சுழற்சிக்கு உட்படாததால் அவர்களின் பெற்றோர் மனம் வருந்தி மருத்துவரிடம் சென்று ஆலோசனை கேட்கின்றனர். அதற்கு அவர்கள் சில ஹார்மோன் மாத்திரைகளைப் பரிந்துரைக்கின்றனர். இதனை ‘சிவப்பு மாத்திரை’ என்னும் கதையில் ஆசிரியர் கூரியுள்ளார்.

**“மருத்துவர் கொஞ்ச நேரம் அமைதியாக வீற்றிருந்தார். உன் மகளுக்கு இந்த மாத்திரையை நி வாங்கிக் கொடுக்காட்டி தான் என்னவாம்? மருத்துவர் கேட்டிருந்தக் கேள்வி எனக்கு இதத்தைக் கொடுத்தது. அம்மாவிடம் கொடுத்த மாத்திரையை வாங்கிக்கொண்டால் தேவலாம் போலிருந்தது. நான் மருத்துவர் மீது பதித்திருந்தக் கண்களை எடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்தேன்”** (சுரா 180).

**5. ஆய்வின் தொகுப்பு மற்றும் முடிவுரை**

**5.1. கண்டுபிடிப்புகளின் புதுமைச் சுருக்கம்**

அண்டனூர் சுரா தனது சிறுகதைகளில் எதிர்காலத்தில் நடைமுறைக்கு வரக்கூடிய, அல்லது தற்போது உருவாகி வரும் தொழில்நுட்பங்களையும், சமூகப் பிரச்சினைகளையும் அறிவியல் புனைவின் வாயிலாகப் பதிவு செய்துள்ளார். இந்த ஆய்வில் ஆராயப்பட்ட முக்கியக் கண்டுபிடிப்புகள் பின்வரும் அட்டவணையில் தொகுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 1: அண்டனூர் சுராவின் சிறுகதைகளில் அறிவியல் கண்டுபிடிப்புகள்**

| சிறுகதை | கண்டுபிடிப்பின் புதுமை | அறிவியல் புனைவின் மையக்கருத்து |
|---|---|---|
| பூங்கோதைக்கும் கற்பு உண்டு | உலகத் தரச்சான்று பெற்ற பெண் ரோபோ (Apple 2+). | இயந்திர மனிதர்களுக்குச் சட்ட உரிமைகளும், உணர்வுக் கட்டுப்பாடுகளும் இருத்தல். |
| தொடர்பு எல்லைக்கு உள்ளே | கட்டணம் வசூலிக்கும் இணைய வழி வாடிக்கையாளர் சேவை. | சேவைத் துறையில் மென்பொருள்/அலைபேசி மூலம் நுணுக்கமான பணம் ஈட்டும் முறை. |
| திற | அலைபேசி இணையத்தின் மூலம் பில் நிலவரத்தை அறிதல். | அனைத்து வாழ்வியல் சேவைகளையும் 'மொபைல் நெட்' மூலம் ஒருங்கிணைத்து அளித்தல். |
| சிவப்பு மாத்திரை | ஹார்மோன் சமநிலையைப் பாதிக்கும் மருத்துவ மாத்திரைகள். | மருத்துவ அறிவியலின் விளைவுகள் தனிப்பட்ட வாழ்வியலில் ஏற்படுத்தும் தாக்கங்கள். |

**5.2. முடிவுரை**

அண்டனூர் சுரா அவர்கள் அறிவியல் கண்டுப்பிடிப்புகளையும் அவற்றின் புதுமைகளையும் தொலை நோக்குப் பார்வையோடு தன் படைப்புகளில் பதிவுசெய்துள்ளார். அவற்றில் சில இன்று நிறைவேறி வருவதைக் காணமுடிகின்றது. அறிவியல் வளர்ச்சி தொன்றுதொட்டே தமிழ் இலக்கியங்களில் காலங்காலமாக வளர்ந்து கொண்டே இருக்கின்றது. இன்றைய படைப்பாளர்களும், தங்களுடைய கவிதை, நாவல், சிறுகதை ஆகியவற்றில் அறிவியல் வளர்ச்சி, அது ஏற்படுத்தும் தாக்கம், அவற்றால் விளையும் வீழ்ச்சி ஆகியவற்றைப் படைத்துக் கொண்டே தான் இருக்கின்றார்.

**தொகுப்புரை**

1. பழந்தமிழ் நூல்களிலும் தற்காலப் படைப்புகளிலும் அறிவியல் கண்டுப்பிடிப்புகளும் புதுமைகளும் சார்ந்த செய்திகளைப் பற்றி அறிய முடிகின்றது.
2. இக்கால இலக்கியங்களான கவிதை, நாவல், சிறுகதை போன்ற படைப்புகளிலும் அறிவியல் கண்டுபிடிப்புகளைப் புனைவு கதைகளாகப் படைக்கப்படுவதை அறிய முடிகின்றது.
3. அறிவியல் கண்டுபிடிப்புகளின் வளர்ச்சியால் சமுதாயத்தில் ஏற்படும் மாற்றங்களை அறிய முடிகின்றது.
4. சிறுகதைகள் அறிவியல் கண்டுப்பிடிப்புகளின் புதுமையின் ஆக்கத்தையும் தாக்கத்தையும் மக்களிடம் கொண்டு சேர்ப்பதை அறிய முடிகின்றது.

5. அறிவியல் கண்டுபிடிப்புகள் கல்வியை வளர்ச்சிப் பாதைக்குக் கொண்டுச் செல்வதை அறிய முடிகின்றது.

---

**மேற்கோள் பட்டியல்**


1. சுரா, அண்டனூர். *ஒரு நாடோடி கலைஞன் மீதான விசாரணை*. இருவாட்சி (இலக்கியத் துறைமுகம்), 2016.
2. ---. *தடுக்கை*. வெற்றி மொழி வெளியீட்டகம், 2021.
3. ---. *திற*. வெற்றி மொழி வெளியீட்டகம், 2021.
4. இராமசுந்தரம். *தமிழ் வளர்க்கும் அறிவியல்*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 2017.
5. மாணிக்கம், அ. புலவர். *சங்க இலக்கிய தொகுப்பு: அகநானூறு*. தொகுதி 2, வர்த்தமான பதிப்பகம்.
6. ---. *சங்க இலக்கிய தொகுப்பு: பதிற்றுப்பத்து*. தொகுதி 5, வர்த்தமான பதிப்பகம்.
7. நீலகண்டன், அரவிந்தன். “அறிவியல் புனைவுகள் - ஓர் எளிய அறிமுக வரலாறு.” *திண்ணை இணைய வார இதழ்*. old.thinnai.com.
8. உ.வே.சா. *புறநானூறு: மூலமும் உரையும்*. டாக்டர் உ.வே.சா. நூல் நிலையம், 2014.
9. "தமிழ் இலக்கணம்." *விக்கிப்பீடியா*. ta.m.wikipedia.org.


**இணைய முகவரி.**

1. old.thinnai.com
2. ta.m.wikipedia.org
3. ta.m.wikipe.org


**உரிமம்**

இந்த ஆக்கம், கிரியேட்டிவ் காமன்சு அட்ரிபியூசன் 4.0 சர்வதேச உரிமத்தின் கீழ் உரிமம் பெற்றுள்ளது.